பக்கங்கள்:-16

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 08 | திங்கட்கிழமை | 23.12.2024 | அதிர்வு 143

## யாழில் காய்ச்சலால் குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த கந்த சாமி குணரத்தினம் (வயது 67) 05



# சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்த 3 மறுசீரமைப்புகள் மிக அவசியம்

### அநுரவிடம் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

"இலங்கையில் சீர்குலைவடைந்திருக்கும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதை இலக்காகக்கொண்டு மேல்நீதிமன்ற வழக்கு விசாரணை செயன்முறையை மறுசீரமைத்தல், ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தை மறுசீரமைத்தல் ஆகிய மூன்று பிரதான விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்."

- இவ்வாறு ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளது. 05

# 'செல்பி' எடுக்க முயன்ற தாயும் மகளும் அதிவேக ரயிலில் மோதி பரிதாபச் சாவு!

அநுராதபுரம் ரயில் நிலையத்துக்கு அருகில் கைத் தொலைபேசியில் "செல்பி" எடுக்க முற்பட்ட தாயும் மகளும் ரயில் மோதி பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

அநுராதபுரம் பொது விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க வந்த மகளும் தாயுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

இரத்தினபுரி பிரதேசத்தில் இருந்து அனுராதபுரத்துக்கு வந்த இவர்கள், அனுராதபுரம் ரயில் நிலையத்துக்கு அருகில் காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற அதிவேக ரயிலின் முன் கைத்தொலைபேசியில் "செல்பி" எடுக்க முற்பட்டபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் 05






"தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரே நியமனம் செய்யப்பட்டாரே தவிர, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளராக யாரும் நியமனம் செய்யப்படவில்லை" என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளருமான ஞா.சிறிநேசன் பேட்டி ஒன்றில் தெரிவித்திருகின்றார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனை பெயர் குறிப்பிடாமல் இவ்வாறு அவர் இலக்கு வைக்கின்றார் என்பது தெளிவானது.

"ஊடகப் பேச்சாளர் என்ற பணி நாடாளுமன்றக் குழுவினால் தானாகத் தரப்பட்ட பணி. கடந்த வவுனியா கூட்டத்தின் போது ஊடகங்கள் என்னையும் சந்தித்தார்கள். முன்னாள் எம்.பி. அவர்களையும் (சுமந்திரனையும்) சந்தித்தார்கள். இதன்போதும் நான் ஊடகங்களுக்குத் தெளிவு படுத்தியிருந்தேன்.

ஆனால் அந்த முன்னாள் 05




# ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவராக பாரத் அருள்சாமி

## கட்சியின் பிரச்சார செயலாளராக லோஷன் நியமனம்

ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழு நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் கட்சியின் தலைவர் நாடாளு மன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையில் கூடியது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் தேர்தல்களுக்கு முகம் கொடுத்திருந்தது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் முருகேசு பரணிதரன், தவிசாளர் ஜெயபாலன், நிதிச் செயலாளர் கணேசன், இணை உப தலைவர் சசிகுமார், நிர்வாகச் செயலாளர் பிரியாணி உட்பட கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, களுத்துறை, மாத்தளை ஆகிய மாவட்ட அமைப்பாளர்கள், பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.

நடைபெற்ற தேர்தல்கள், நாடு முழுவதும் கட்சியின் வியூகங்கள் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

பல சவால்களுக்கு மத்தியிலும் கட்சி சார்பாகப் போட்டியிட்ட வேட்பாளர்கள் கணிசமான வாக்குகளைப் பெற்றுக் கொண்டமை தொடர்பாகவும், எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள திட்டங்கள் பற்றியும் தீர்க்கமாகக் கலந்துரையாடப்பட்டது.

உளளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் பல சாத்தியங்கள் ஆராயப்பட்டன.

தனித்து ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏணி சின்னத்தில், தமிழ் முற்போக்குக் கூட்டணியாக மின்சூழ் (டோர்ச் லைற்) சின்னத்தில் அல்லது ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்தில் களம் இறங்குவது என்ற பல சாத்திய, சாதக பாதகங்கள் ஆராயப்பட்டன.

கட்சியின் சர்வதேச தொடர்பாடல்கள் விவகார உப தலைவராக பாரத் அருள்சாமி, கட்சியின் பிரச்சார செயலாளராக ஏ.ஆர்.வி. லோஷன், உதவிச் செயலாளராக பாலசுரேஷ் குமார் ஆகியோர், தலைவர் மனோ கணேசனால் பிரேரிக்கப்பட்டு அரசியல் குழுவினால் ஏகமனதாக ஆமோதிக்கப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நேற்றைய ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அரசியல் குழுக் கூட்டத்தையடுத்து எதிர்வரும் வாரங்களில் அனைத்து மாவட்ட அரசியல் குழுக் கூட்டங்களும் நடைபெறும்.

# சட்டவிரோத மதுபானத்துடன் இருவர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சட்ட விரோத மதுபானத்துடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.



இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கோப்பாய் மத்தி பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தி இடம்பெறுகின்றது என யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்துச் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், இருவரைக் கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து 10 லீற்றர் சட்டவிரோத மதுபானத்தையும் மீட்டனர்.

மீட்கப்பட்ட சட்டவிரோத மதுபானத்துடன் கைது செய்யப்பட்ட நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.



# அரிசி இறக்குமதி மூலம் சுங்கத்திற்கு 430 கோடி ரூபா வருமானம் கிடைத்தது

பண்டிகைக் காலம் ஆரம்பித்துள்ள நிலையில், சில பிரதேசங்களில் இன்னும் பல வகையான அரிசிகளுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன்னர், இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசி தொகை மூலம் இலங்கை சுங்கத்திற்கு இறக்குமதி வரியாக 430 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

தனியார் துறையினால் இறக்குமதி செய்யப்பட்ட 67,000 மெற்றிக் டன் அரிசி மூலம் இந்த வருமானம் கிடைத்துள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

# பட்டாசு உற்பத்தி தொழிற்துறை வீழ்ச்சி



பண்டிகை காலம் நெருங்கி வருகின்ற நிலையில் நாட்டில் தற்போது பட்டாசு உற்பத்தி தொழிற்துறை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக பட்டாசு உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பட்டாசு உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் தினேஷ் பெர்னாண்டோ நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது பட்டாசு உள்ளிட்ட கேளிக்கை பொருள்களுக்கான கேள்வி குறைவடைந்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலை மையமாகக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பட்டாசுகளில் 90 சதவீதமானவை விற்பனை செய்யப்படாமல் எஞ்சியுள்ளன.

அப்போது உற்பத்தி செய்யப்பட்ட பட்டாசுகளை நத்தார் பண்டிகை மற்றும் புதுவருடப் பிறப்பின் போது பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சிலர் அனுமதிப்பத்திரம் பெறாமலும் சில தரமற்ற பட்டாசுகளை உற்பத்தி செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர் என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில், உற்பத்தி செய்யப்பட்ட பட்டாசுகளை, அவற்றுக்கான உற்பத்தி செலவுகளையேனும், மீளப்பெறுவதற்கு அவற்றைக் குறைந்த விலையில் சந்தைக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை சில உற்பத்தியாளர்கள் முன்னெடுத்துவருகின்றனர் என பட்டாசு உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் தினேஷ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.



# இலண்டன் வாழ் ஈழத்துச் சிறுமிகள் ஜீ.வி.பிரகாஷ்குமாருடன் இணைந்து பாடியுள்ள மகளிர் பெருமை கூறும் 'மகளி'

"த வொய்ஸ் ஆர்ட்ஸ்" நிறுவனத்தின் தயாரிப்பில் இலண்டன் வாழ் ஈழத்துச் சிறுமிகளான வைஷ்ணபி மற்றும் மதுமிதா ஆகியோர் தென்னிந்திய சினிமாவின் முன்னணி இசையமைப்பாளரும் நடிகருமான ஜீ.வி.பிரகாஷ்குமாருடன் இணைந்து பாடியுள்ள "மகளி" என்ற அல்பம் பாடல் வெளியிடப்படவுள்ளது.

மகளிரின் பெருமைகளைப் பறைசாற்றும் விதமாக அமைந்துள்ள இந்தப் புரட்சிப் பாடலுக்கான வரிகளைப் பின்னணிப் பாடகரான எம்.கே. பாலாஜி எழுதியுள்ளார். கணேஷ் சந்திரசேகரன் இசையமைத்துள்ளார்.

இந்தப் பாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இலண்டன் நேரப்படி மாலை 5 மணிக்கு LONDON HAYES பகுதியில் அமைந்துள்ள CRYSTAL HALL இல் நடைபெறவுள்ள பிரமாண்ட இசை நிகழ்ச்சியில் வெளியிடப்படவுள்ளது.

இந்தப் பாடலை ஜீ.வி.பிரகாஷின் தாயாரும், ஏ.ஆர். ரஹ்மானின் சகோதரியுமான ஏ.ஆர்.ரைஹானா அறிமுகம் செய்து வைக்க, பிரிட்டன் எம்.பியான எமிலி டார்லிங்டன் வெளியிட்டு வைக்கவுள்ளார்.

இதற்கிடையில், இந்தப் பாடலை கடந்த 16ஆம் திகதி பிரிட்டன் நாடாளுமன்றத்தில் த வொய்ஸ் ஆர்ட்ஸ் குழுவினருடன் எமிலி டார்லிங்டன் எம்.பி. இணைந்து பாடியிருந்தார்.

இந்தப் பாடலைத் தயாரித்துள்ள "த வொய்ஸ் ஆர்ட்ஸ்" நிறுவனத்தினரிடம் பயிற்சி பெற்றவர்கள் இந்திய பிரபல தொலைக்காட்சிகளான விஜய் மற்றும் ஜீ தமிழ் நடத்தும் பாடல் போட்டிகளில் பங்கேற்று திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினருக்கு அந்தப் பதவி (கட்சிப் பேச்சாளர் பதவி) வழங்கப் பட்டதாக எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது உண்மை. பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பலர் வெளியேறியதன் பின்னர் அது முற்றுப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் தற்போது என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை நான் செய்கின்றேன். அது பற்றியே என்னால் கூற முடியும். மற்றைய விடயத்தை எமது மத்திய குழுவும் நாடாளுமன்றக் குழுவுமே அது பற்றிய முடிவை எடுக்க வேண்டும்." - இப்படி சிறிநேசன் மேலும் கூறியிருக்கின்றார்.

'கணக்குப்பிள்ளை பேசக் கூடாது, கணக்குப் புத்தகம் பேச வேண்டும்' - என்பார்கள்.

இந்த விடயத்தில் கட்சி சார்ந்த விவகாரங்களில் கட்சியின் அறிக்கைப் பதிவு புத்தகங்கள்தான் விடயங்களைத் தெளிவுபடுத்த முடியும்.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை நீண்ட காலமாக கட்சியின் நிர்வாக செயலாளராக இருக்கும் குலநாயகத்திடம் கட்சியின் அறிக்கை பதிவுகள் உள்ளன. அவற்றைத் தேடிப்பிடித்துப் படித்து இந்த விடயங்களுக்கு பதில் கூறுவதை விடுத்து, 2015 தேர்தலோடு கட்சிக்கு வந்து சேர்ந்த சிறிநேசன் பழைய விடயங்கள் பற்றி தான் தோன்றித்தனமாக உரைக்கக் கூடாது.

தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் விடயம் தொடர்பில் ஏற்கனவே நிர்வாகச் செயலாளர் குலநாயகத்துடன் உரையாடி சில விடயங்களை இப்பத்தியில் தெளிவுபடுத்தி இருந்தேன். சிறிநேசனின் அரைகுறைத் தகவல்களைத் தெளிவுபடுத்துவதற்காக அவ்விவகாரங்களை மீள வெளிப்படுத்துவது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

2010 இல் இருந்து 2015 வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளராக ஈ.பி.ஆர்.எல்.எவ் வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனே செயற்பட்டார். அதனால் கூட்டமைப்பில் பெரும்பான்மை பங்கு வகித்த தமிழரசு கட்சியினருக்கு சில நெருக்கடிகள் இருந்தன. அதையொட்டி அவ்வப்போது பல செய்திகள் அச்சமயத்தில் வெளிவந்து கொண்டிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அதன் காரணமாக 2014 ஆம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டிலும் அதற்கு முந்திய, பிந்திய மத்திய குழு கூட்டங்களிலும் இவ்விடயம் ஆராயப்பட்டது.

2014 ஆம் ஆண்டு தேசிய மாநாட்டுக்கு அடுத்து நடைபெற்ற மத்திய குழுவின் கூட்டத்தில் வைத்து கட்சியின் அப்போதைய புதிய தலைவர் மாவை சேனாதிராஜா தமிழரசுக் கட்சியின் பேச்சாளராக சுமந்திரனை அறிவித்தார்.

2015 பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளராகவும் நியமனம் பெற்றார்.

2019 இல் நடைபெற்ற தமிழரசு கட்சியின் தேசிய மாநாட்டில் வைத்து கட்சியின் ஊடக விடயங்களுக்காகத் துணைச் செயலாளராக அரியநேத்திரனையும் கட்சியின் பேச்சாளராக சுமந்திரனையும் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா அறிவித்தார்.

கடந்த நாடாளுமன்றத்திலும் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளராக சுமந்திரனே தொடர்ந்தார்.

அண்மையில் நடைபெற்ற தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் இந்தக் கட்சி பேச்சாளர் விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

கட்சியினுடைய நாடாளுமன்றக் குழுப் பேச்சாளர் பொறுப்பையும், கட்சியின் பேச்சாளர் பொறுப்பையும் சாணக்கியன் ஏற்பாராயின் தாம் கட்சியின் பேச்சாளர் பதவியையும் விட்டுக் கொடுக்கத் தயார் என்று சுமந்திரன் அக்கூட்டத்தில் தெரிவித்தார்.

"இல்லை. நீங்கள் கட்சியின் பேச்சாளராகத் தொடருங்கள். கட்சியின் நாடாளுமன்றக் குழு தனது பேச்சாளரைத் தெரிவு செய்து கொள்ளும்." என்று சிறிதரன் எம்.பி. தெரிவித்தமையின் பேரில் அதுவே முடிவாக எடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கட்சியின் பேச்சாளராக சுமந்திரன் தொடர்கிறார்.

அப்படி இருக்கையில் கட்சியின் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளராக தேர்வு செய்யப்பட்ட சிறிநேசன், இப்போது தம்பாட்டில் புதுக் கதை விடுகிறார். எதற்கும் ஒரு தடவை அவர் யாழ்ப்பாணத்தில் தமிழரசு கட்சியின் அலுவலகத்துக்குச் சென்று கட்சியின் கூட்ட அறிக்கைகளை ஒரு தடவை புரட்டிப் பார்த்து இவ்விடயத்தில் தன்னைப் பேச்சாளர் பதவிக்குரிய தகைமைக்கு உயர்த்தி கொள்வது பொருத்தமானது என்று நினைக்கிறேன்.

---

## சட்டத்தின் ஆட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொள்கை மற்றும் செயற்றிட்டப் பணிப்பாளர் பாஸில் பெர்னாண்டோவினால் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கையில் சட்டத்தின் ஆட்சியையும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துவதை இலக்காகக்கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்புக்களில் பிரதானமாகக் கருத்தில் எடுக்கப்பட வேண்டிய மூன்று மறுசீரமைப்புக்களை உங்களது கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

நாம் கடந்த பல வருடகாலமாக இலங்கையில் சீர்குலைவடைந்திருக்கும் சட்டத்தின் ஆட்சி குறித்து தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்திருக்கின்றோம். நீண்டகாலமாக நீங்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளிலும், கடந்த தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தியால் மேற்கொள்ளப்பட்ட நிலைப்பாட்டிலும் இவ்விடயம் உள்வாங்கப்பட்டதுடன், சிறந்த ஆட்சியியல் நிர்வாகக் கட்டமைப்பை நிறுவுதல் எனும் பொது நோக்கத்தின் அடிப்படையில் பலர் ஒன்றிணைந்தனர்.

எனவே, கடந்த 50 வருடங்களில் முதன்முறையாக வரலாற்று ரீதியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதை முன்னிறுத்திய அரசியல் தன்முனைப்பு வெளிப்படுத்தப்பட்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்வாறானதொரு பின்னணியில் முதலாவதாக மிக மோசமான குற்றங்கள் தொடர்பில் தினந்தோறும் மேல் நீதிமன்றங்களில் நடைபெறும் வழக்கு விசாரணைகள் முறையான விதத்தில் மறுசீரமைக்கப்பட வேண்டும். குறிப்பாக குற்றங்களுக்கு விதிக்கப்பட வேண்டிய தண்டனைகள் தொடர்பில் நிச்சயமற்ற தன்மையொன்று நிலவும் பட்சத்தில், நாட்டின் ஒட்டுமொத்த குற்றவியல் சட்ட நடைமுறைகளும் சீர்குலையும்.

இலங்கையில் தற்போது அவ்வாறானதொரு நிலையே காணப்படுகின்றது. மிகப் பாரதூரமான வழக்குகள் மேல்நீதிமன்றத்தில் தினந்தோறும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவது அவசியமாகும். குற்றவியல் வழக்குகள் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் இடமாற்றம் செய்யப்படுவதானது, அவ்வழக்கு விசாரணைகள் தாமதமடைவதற்கு வழிகோலியுள்ளன.

நிர்வாக ரீதியான சிக்கல்கள் காரணமாக வழக்கு விசாரணைக்கான திகதிகள் அடிக்கடி மாற்றியமைக்கப்படுவதனால் வழக்குகள் பல வருடகாலமாக இழுத்தடிக்கப்படுகின்றன. எனவே அரசியல் தன்முனைப்பு மற்றும் தூரநோக்கு சிந்தனை என்பவற்றின் ஊடாக இச்செயன்முறையை ஆக்கபூர்வமான விதத்தில் மறுசீரமைப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக ஊழல், மோசடிகள் இடம்பெறுவதைக் கட்டுப்படுத்தக் கூடிய வாறான மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன்படி இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கான குற்றவியல் விசாரணை அதிகாரிகளை பொலிஸ் சேவையிலிருந்து தெரிவு செய்யும் தற்போதைய நடைமுறையைக் கைவிட வேண்டும்.

மாறாக குறித்த ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் பொலிஸ் திணைக்களத்துக்கு வெளியிலிருந்து தெரிவு செய்யப்படுவதுடன், அவர்கள் பொலிஸ்மா அதிபர் மற்றும் ஏனைய திணைக்களங்களுடன் தொடர்பற்ற முற்றிலும் சுயாதீனமானவர்களாக இருக்க வேண்டும்.

மூன்றாவதாக சட்டமா அதிபர் திணைக்களம் மறுசீரமைக்கப்பட வேண்டும். 1978 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மாற்றத்தின் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு ஏற்புடையதும், தன்னிச்சையான செயற்பாடுகளுக்கும் பெரிதும் இடமளிக்கக் கூடிய வகையிலும் ஸ்தாபிக்கப்பட்ட கட்டமைப்பான சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்த முடியாது. எனவே, இந்தக் கட்டமைப்பு அவசியமான மறுசீரமைப்புக்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும்." - என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

---

## யாழில் காய்ச்சலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சாவடைந்தார்.

இவர் நான்கு தினங்களாகக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், அவரை நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

---

## 'செல்வி' எடுக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இரத்தினபுரியைச் சேர்ந்த 37 வயதுடைய தாயும், 18 வயதுடைய மகளுமே உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிய அரசமைப்பு நிச்சயம்

## அநுர அரசு உறுதி



"இலங்கையில் புதிய அரசமைப்பு இயற்றப்படும் என்ற உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும். இந்த விடயத்தில் அரசு எந்த விதத்திலும் பின்வாங்காது."

– இவ்வாறு பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:–

"நாட்டில் தற்போதுள்ள அரசமைப்புக்குப் பதிலாக புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என்ற உறுதிமொழி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மக்கள் ஆணையும் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, அந்த உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும்.

புதிய அரசமைப்பு தொடர்பில் மக்களின் கருத்துக்கள் உள்வாங்கப்படும். நாட்டில் இதுவரை இயற்றப்பட்ட அரசமைப்புகளின்போது மக்களின் கருத்துகள் உள்வாங்கப்படவில்லை. எம்மால் கொண்டுவரப்படும் அரசமைப்பு மக்கள் அனுமதி கிடைத்ததாக இருக்க வேண்டும். அதற்குரிய பணிகளுக்காகவே மூன்று வருடங்கள் என கால எல்லை குறிப்பிடப்பட்டிருக்கலாம்.

கடந்த கால யோசனைகளும் உள்வாங்கப்பட்டு எவ்வளவு சீக்கரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இதனைச் செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். சிலவேளை மூன்று வருடங்களுக்கு முன்னர்கூட அது நடக்கலாம்." – என்றார்.

# மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் இதுவரையில் தீர்க்கப்படவில்லை

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு


நாட்டுக்கு சர்வதேச ரீதியாக அங்கீகாரம் கிடைத்தாலும் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் இதுவரையில் தீர்க்கப்படவில்லை என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பிரதான அலுவலகத்தைத் திறந்து வைத்து நேற்று உரையாற்றும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, அடுத்த வருடம் முதல் கிராமங்களை அபிவிருத்தி செய்வது தற்போதைய அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.



# அரசியல் வாழ்க்கை தொடர்பில் புத்தகம் எழுதுகின்றார் ரணில்



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது அரசியல் வாழ்க்கை தொடர்பான சுயசரிதையொன்றை எழுதும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

1973 ஆம் ஆண்டு கம்பஹா மாவட்டத்தின் பியகம தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராக ரணில் விக்கிரமசிங்க, தனது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்தார்.

அதன் பின்னர் 1977 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்தார்.

கடந்த 50 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவி தவிர்ந்த நாடாளுமன்றத்தின் ஏனைய அனைத்துப் பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

அத்துடன் இலங்கை பொருளாதார ரீதியாக வீழ்ச்சியுற்று, வங்குரோத்து அடைந்திருந்த நிலையில் இந்த நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்று, மிகக் குறுகிய காலத்தில் இலங்கையைப் பொருளாதாரச் சரிவில் இருந்து மீட்டெடுத்த திறமையான அரசியல் தலைவராகவும் ரணில் விக்கிரமசிங்க பாராட்டப்படுகின்றார்.

ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் தற்போதைக்கு சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதாரச் சொற்பொழிவாளராக அவர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

இந்நிலையில் தனது கடந்த 50 வருடகால அரசியல் வாழ்க்கை குறித்த சுயசரிதையொன்றை எழுதும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

# ஆபிரிக்கப் பெரும் நத்தைகளை கட்டுப்படுத்தாவிடில் பேராபத்து!

## சூழலியலாளர் ஐங்கரநேசன் எச்சரிக்கை




ஆபிரிக்காவைத் தாயகமாகக் கொண்ட பெரும் நத்தைகள் சமீபத்தில் பெய்த பெருமழையின் பின்னர் பல பகுதிகளில் படையெடுக்க ஆரம்பித்துள்ளன. ஆபிரிக்கப் பெரும் நத்தைகள் ஏற்கனவே இங்கு அவதானிக்கப்பட்டபோதும் இப்போது இவற்றின் பெருக்கம் அதிகமாக உள்ளது. பயிர் பச்சைகளையெல்லாம் தின்று தீர்க்கும் இவை, உள்ளூர் உயிரினங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதோடு நோய்களைப் பரப்பும் காவிகளாகவும் செயற்படுகின்றன. இவற்றை இப்போதே கட்டுப்படுத்தத் தவறின் விரைவில் பேராபத்துகளை விளைவிப்பவையாக இவை அமையும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

ஆபிரிக்க நத்தைகள் தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை பொ. ஐங்கரநேசன் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஆபிரிக்கப் பெரும் நத்தைகள் (African Giant Snail- Lissachtina fulica) பிரித்தானியர் ஒருவரால் பின்விபரீதங்கள் புரியாமல் இலங்கைக்குள் எடுத்துவரப்பட்ட ஓர் அந்நியஇனம். ஒரு நத்தையிலேயே ஆண், பெண் இனப்பெருக்க அமைப்புகள் இரண்டும் இருப்பதால் இரண்டு நத்தைகள் சோடி சேரும்போது இரண்டுமே முட்டைகளை உருவாக்குகின்றன. சராசரியாக 5 தொடங்கி 6 ஆண்டுகள் வரை வாழுகின்ற ஒரு நத்தை தன் ஆயுளில் ஆயிரத்துக்கும் அதிகமான முட்டைகளை இடுகின்றது. அந்நிய இனமான இவற்றை இரையாக்க இலங்கையின் இயற்கைச் சூழலில் இரைகௌவிகள் எதுவும் இல்லை. இதனால் பல்கிப்பெருகி இப்போது ஓர் ஆக்கிரமிப்பு இனமாக உருவெடுத்துள்ளது.

உலகின் உயிர்ப் பல்வகைமையின் அழிவுக்கு அந்நிய ஊடுருவல் இனங்களும் ஒரு பெருங்காரணமாக உள்ளது. பகலில் மறைந்திருந்துவிட்டு இரவில் இரைதேடும் ஆபிரிக்க நத்தைகள் பயிர்கள், அலங்காரச் செடிகள், புல் பூண்டுகள் என்று எல்லாவற்றையும் தின்று தீர்த்து வருகின்றன. ஒரு தாவரத்தில் உள்ள நோய்க்கிருமிகளை இன்னொரு தாவரத்துக்குக் காவிச் செல்கின்றன. இவற்றோடு மனிதர்களில் மூளைமென்சவ்வு அழற்சியை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிப் புழுக்களை இவை காவித்திரிவதும் அறியப்பட்டுள்ளது. ஆபிரிக்க நத்தைகள் பயிர்ச்செய்கைக்கும், உயிர்ப்பல்வகைமைக்கும் அச்சுறுத்தலாக இருப்பதால் இலங்கை அரசாங்கம் இதனை அந்நிய ஊடுருவல் இனமாக அறிவித்துள்ளது.

ஆபிரிக்க நத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் திணைக்களங்களுக்காகக் காத்திராமல் பொதுஅமைப்புகளும், பொதுமக்களும் முன்வரவேண்டும். உப்பு நீர்க்கரைசல் உள்ள பாத்திரம் ஒன்றில் இவற்றை அமிழ்த்துவதன் மூலம் சுலபமாக அழிக்க முடியும். ஆபிரிக்க நத்தைகள் நோய்க்காவிகளாகவும் இருப்பதால் வெறும் கைகளால் நேரடியாகத் தொடாமல் இலைகள், கடதாசிகள் போன்றவற்றால் இவற்றைப் பிடிப்பதே பாதுகாப்பானது. இதனை ஒரு சமூகக்கடமையாகக. கருதி நாம் விரைந்து செயற்படவில்லையெனில் ஏற்கனவே பாரிய பொருளாதாரச் சீரழிவுக்கும், சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கும் ஆளாகியிருக்கும் இலங்கை இந்நத்தையாலும் பெரும் சீரழிவுகளைச் சந்திக்க நேரும்.– என்றும் தெரிவித்துள்ளார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முதுகில் குத்தும் இந்தியா!

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் அண்மைய இந்திய விஜயத்தின் முக்கிய பெறுபேறாக - கொழும்பின் வெற்றியாக - தென்னிலங்கைத் தரப்பில் ஒரு விடயம் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

அது - வழமையாக இந்திய, இலங்கைத் தலைவர்களின் சந்திப்புகளின் பின்னான கூட்டு அறிக்கைகளிலும் கூட்டு பத்திரிகையாளர்கள் சந்திப்புகளிலும் இந்தியத் தரப்பினால் வலியுறுத்தப்பட்டு வரும் இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் முழுமையான நடைமுறையாக்கம் பற்றிய விவகாரம் இம்முறை சந்திப்பின் பின்னான கூட்டறிக்கையில் முழுமையாக இடம் பெறவில்லை என்பதுதான்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் என்பது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பெறுபேறாக முன்னெடுக்கப்பட்டது. இலங்கையில் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு என்ற பெயரில் இந்தியத் தலையீட்டில் - தலையீடு என்பதையும் தாண்டி கடும் அழுத்தத்தில் - முன்னெடுக்கப்பட்டதே இந்த ஒப்பந்தம்.

இந்த ஒப்பந்த ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டதே 13ஆவது அரசமைப்புத் திருத்தம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்ட பல அம்சங்கள் உரிய முறையில் இந்த 13 ஆவது திருத்தத்தில் சேர்க்கப்படவில்லை.

அதுவும் அல்லாமல், 13ஆவது திருத்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட பல்வேறு அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரவே இல்லை. அரசமைப்பில் இருக்கும் ஒழுங்குகளை இதுவரை காலமும் இருந்து வந்த இலங்கை அரசுகள் நடைமுறையாக்காமல் வெறும் எழுத்தில் அவற்றைப் பேணி வந்தன.

அது மாத்திரம் இல்லாமல், 13 ஆவது திருத்தம் மூலம் பகிரப்பட்ட பல்வேறு அதிகாரங்களைக் காலத்திற்கு காலம் புதிய சட்டங்கள் மூலம் கொழும்பு அரசு மீளப் பெற்று - பறித்து - வந்ததும் தொடர்ந்தது.

இந்தப் பின்புலத்தில்தான் இந்தியா இதுவரை காலமும் தொடர்ந்து 13 ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்தை வலியுறுத்தி வந்தது.

இப்போது இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்துக்கு முன்னர் அந்த விடயத்தை ஒட்டி வெளியிடப்பட போகின்ற கூட்டறிக்கை குறித்து அதிகார மட்டத்தில் இரண்டு வாரங்களுக்கு மேல் பேச்சுகளும் ஊடாட்டங்களும் இடம்பெற்றன என்று கூறப்படுகின்றது. அப்போது இலங்கைத் தரப்பு வலியுறுத்தி நின்றதனால் - அதன் ராஜதந்திரப் பிடிவாதத்துக்கு இணங்கி, 13 ஆவது திருத்தத்தை வலியுறுத்துகின்ற வாசகத்தை - விடயத்தை கூட்டறிக்கையில் கைவிட இந்தியா இணங்கியதாக இப்போது செய்திகள் வெளியாகின்றன.

சீனச் சார்புப் போக்கு கொண்ட இடதுசாரிகள் அரசு கொழும்பில் பதவியேற்ற காலம் முதல் அந்த அரசை தாஜா பண்ணி, தன் கைக்குள் கொண்டு வருவதற்காக பல விட்டுக்கொடுப்புகளுக்கும், தாராளங்களுக்கும் புதுடில்லி தயாராகி வருவதாக செய்திகள் வெளியாகி வந்தன. அந்தப் பின்புலத்தில்தான் இப்போது 13 ஆவது திருத்தத்தை வலியுறுத்தாமல் கைவிடும் இந்திய ராஜதந்திரப் பின்னடைவு பற்றிய செய்தி வெளிப்பட்டிருக்கின்றது.

கொழும்பின் வலியுறுத்தலில் - கொழும்பு அரசைத் தாஜா பண்ணி சமாளிப்பதற்காக - தமிழர்களுக்கு நீதி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்ற 13 ஆவது திருத்தத்தைக் கைவிட புதுடில்லி இணங்கி இருக்குமானால், அது தனது சொந்த ராஜதந்திர நலன்களுக்காக ஈழத் தமிழரை கைவிட்டு, அவர்களின் முதுகில் ஒரேயடியாகக் குத்தத் தயாராகிவிட்டது என்பதுதான் அர்த்தம்.

ஈழத் தமிழர்களுக்கான தீர்வு என்ற பெயரில் தன் எண்ணப்படி, தன்னிஷ்டப்படி, அரைகுறைத் தீர்வு திட்டம் ஒன்றை இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் வல்வந்தமாக ஈழத் தமிழர்கள் மீது திணித்த இந்தியா, அதன் மூலம் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியது. இப்போது ஒருதலைப் பட்சமாக ஈழத் தமிழர்களை முற்றாகக் கைவிட அது தயாராகிவிட்டது என்பதுதான் இதன் அர்த்தமாகும்.

இந்த நடவடிக்கை மூலம் எண்பதுகளிலிருந்து இந்த விடயத்தில் விடுதலைப் புலிகள் பிடிவாதமாகக் கைக்கொண்டு வந்த நிலைப்பாடு முற்றிலும் சரியானதே என்பதை உறுதிப்படுத்த முயல்கிறது புதுடில்லி என்றே தோன்றுகின்றது.




# மட்டக்களப்பு நகரில் இரு விபத்துகளில் இளைஞன் ஒருவர் உட்பட இருவர் சாவு!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸ் பிரிவில் வீதியால் நடந்து சென்றவர் மீது கனரக வாகனம் மோதியும் மற்றும் கனரக வாகனத்தில் மோட்டார் சைக்கிள் மோதியும் ஏற்பட்ட இரு வீதி விபத்துச் சம்பவங்களில் 20 வயது இளைஞர் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் கனரக வாகன உரிமையாளர் மற்றும் சாரதி இருவர் உட்பட 3 பேரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியிலுள்ள வெள்ளக்குட்டி சந்தி பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நகர்ப் பகுதியை நோக்கிப் பிரயாணித்த கனரக வாகனம் வீதியைக் கடக்க முயன்ற ஒருவர் மீது மோதி விபத்துக்குள்ளானதில் மட்டு. நாவற்கேணியைச் சேர்ந்த 46 வயதுடைய சி.சிவநேஸ்வரன் என்பவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தின் பின்னர் கனரக வாகன சாரதியைப் பொலிஸார் கைது செய்தனர்.

அதேவேளை மாமாங்கம் கோவில் வீதியில் சனி இரவு 10.00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பிரயாணித்த ஒருவர் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வீதியை செப்பனிட பயன்படுத்தும் (ட்றோலர்) கனரக வாகனத்துடன் மோதியதையடுத்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

மாமாங்கம் பாடசாலை வீதியைச் சேர்ந்த 22 வயதுடைய ரஞ்சித்து சவிஷ்தன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து வீதியில் கனரக வாகனத்தை நிறுத்திவைத்திருந்த வாகன உரிமையாளர் மற்றும் சாரதி உட்பட இருவரை கைது செய்த பொலிஸார் வாகனங்களை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கைது செய்தவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியா தெற்கில் பற்றாக்குறை 23 கணித பாட ஆசிரியர்களுக்கு

(கி.வசந்தன்)

வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித பாட ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வவுனியா தெற்கு வலய செயலாளர் கிருஷ்ண கோபால்வசந்தரூபனால்அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் தற்போதும் பல பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனை ஆசிரியர் இடமாற்றங்கள் மற்றும் நியமனங்களின் போது வடக்கு மாகாண கல்வி அமைச்சு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித பாட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதுடன் 2 விஞ்ஞான பாட ஆசிரியர்களும் பற்றாக்குறையாக இருக்கின்றது. அத்துடன் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப பாடத்திற்கு 7 ஆசிரியர்களும் பற்றாக்குறையாக உள்ளது.

முக்கியமான பாடத்துறைகளில் நிலவும் இவ்வாறான ஆசிரியர் பற்றாக்குறையானது மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தியுளளது. எனவே, தற்போது வட மாகாணத்தில் வழகங்கப்படவுள்ள ஆசிரியர் இடமாற்றங்களின் போது இதனை கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது. - எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசியப் பாடசாலை அதிபர் வெற்றிடங்கள் கல்வி அமைச்சின் அறிவிப்பு வெளியானது




தேசியப் பாடசாலைகளில் வெற்றிடமாக உள்ள இலங்கைக் கல்வி நிர்வாக சேவை தரம் 1 அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான விசேட அறிவிப்பை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் பணிப்புரைக்கு அமைவாக இலங்கைக் கல்விச் சேவையின் தரம் 1 உத்தியோகத்தர்களிடமிருந்து அந்தப் பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் கோருவதற்காக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தயாரிக்கப்பட்ட அறிவிப்பு, பாடசாலைப் பதிவு, மதிப்பெண் நடைமுறை, மாதிரி விண்ணப்பப்படிவங்கள் என்பன கடந்த 11ஆம் திகதி கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

அந்த அறிவிப்பின்படி, இணைய தளத்தில் உள்ள "விசேட விளம்பரங்கள்" பிரிவின் கீழ் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் இறுதித் தினம் டிசம்பர் 31ஆம் திகதி என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மேல் மாகாணத்தில் பணம் அறவிட்டு மேலதிக வகுப்புகளை நடத்த தடை

மேல் மாகாண ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடசாலையின் மாணவர்களுக்கு பணம் அறவிட்டு மேலதிக வகுப்புகளை நடத்த தடை விதித்து சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மேல் மாகாண கல்வி செயலாளர் கே.ஏ.டீ.ஆர். நிஷாந்தி ஜயசிங்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள இந்த சுற்றறிக்கை மேல் மாகாண பணிப்பாளர், வலயக்கல்வி பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி பணிப்பாளர்கள் மற்றும் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பாடசாலை நேரங்களிலும் அதற்கு பின்னரும் அல்லது வார இறுதி நாள்கள் உள்ளிட்ட அரச விடுமுறை தினங்களிலும் கூட இவ்வாறு பணம் அறிவிட்டு மேலதிக வகுப்புகளை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் சில ஆசிரியர்கள் தாம் கடமையாற்றும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வெளியிடங்களில் பணம் அறவிட்டு மேலதிக வகுப்புகளை நடத்துவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மேல் மாகாண கல்வி செயலாளர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் பணம் அறிவிட்டு மேலதிக வகுப்புகளை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமையை அனைத்து ஆசிரியர்களுக்கும் அறிவித்து அவர்கள் அது தொடர்பான தெளிவை பெற்றிருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்திய ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனையை கவனத்தில் கொள்ளாது செயற்படும் ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

பணம் அறிவிட்டு மேலதிக வகுப்புகளை நடத்துவதற்கு சப்ரகமுவ மாகாணத்திலேயே முதலாவதாக தடை விதிக்கப்பட்டது.

அதற்கு பின்னர் மத்திய மாகாணத்திலும் இந்த தடை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

# ஹட்டன் பஸ் விபத்து தொடர்பில் பஸ்ஸின் சாரதிக்கு விளக்கமறியல்

ஹட்டன், மல்லியப்பூ பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட பஸ்ஸின் சாரதி எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்சிகிச்சைபெறும்வைத்தியசாலைக்கு சென்ற பதில் நீதவான், வைத்தியர்களிடம் அவரது நிலைமை தொடர்பில் விடயங்களைக் கேட்டறிந்த பின்னர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த 46 வயதான சாரதியே இந்த விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹட்டன் – மல்லியப்பூ பகுதியில் தனியார் பஸ்ஸொன்று 20 அடி பள்ளத்தில் வீழ்ந்து நேற்று முன்தினம் விபத்திற்குள்ளானது.

விபத்தில் 3 பேர் உயிரிழந்ததுடன், 46 பேர் காயமடைந்தனர்.




# எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரிப்பு

நாட்டின் சில பகுதிகளில் சீரற்ற காலநிலை காரணமாக எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக வைத்திய நிபுணர் பேராசிரியர் பிரிய மாலி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

வயல்கள் மற்றும் நீர்த் தேங்கி நிற்கும் இடங்களில் பணியாற்றுபவர்கள் மற்றும் எலிகள் அதிகளவில் நடமாடும் இடங்களில் உள்ளவர்களுக்கு இந்த நோய் தாக்கம் ஏற்படும் அபாயம் அதிகமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான நோய் எதிர்ப்பு மருந்துகளை அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வைத்திய நிபுணர் பேராசிரியர் பிரிய மாலி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

# அனைத்து மாணவர்களுக்கும் சமமாக சலுகைகள் வழங்கப்பட வேண்டும்

## ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு




பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தற்போதைய அரசாங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு வழங்குவது நியாயமற்றதென ஆசிரியர் சங்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

அஸ்வெசும பயனாளிகளின் பிள்ளைகளுக்கும், அஸ்வெசும கொடுப்பனவு தேவையுடையோரின் பிள்ளைகளுக்கும் 6,000 ஆயிரம் ரூபா உதவித்தொகை வழங்குவதை விட, அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் அரசாங்கம் சலுகைகளை வழங்க வேண்டும் என அந்த சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

அதன்படி, அனைத்து மாணவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மாணவர்தொகைக்கேற்பவரிகுறைக்கப்பட்டு சலுகைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டதொரு குழுவிற்கு மாத்திரம் 6,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவது பாரிய பிரச்சினையாகும் என்றும் கூறியுள்ளார்

இந்த சலுகைகள் அனைத்து மாணவர்களுக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும் என அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரையில் அறிவிக்கப்பட்டதற்கு அமைய, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தைக் கல்விக்காக ஒதுக்க வேண்டும் என புரட்சிகர மாணவர் ஒன்றியத்தின் செயற்குழு உறுப்பினர் மங்கள மத்துமகே தெரிவித்துள்ளார்.




# 10 வீதி விபத்துக்களில் 13 பேர் 24 மணித்தியாலயத்தில் சாவு!

(கனகராசா சரவணன்)

நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற 10 வீதி விபத்துகளில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

மட்க்களப்பு, ஹட்டன், சீதுவ, பின்னதுவ, மாரவில, ஹம்பலாந்தோட்டை, மிரிஹான, கம்பளை, ஹெட்டிபொல, கெப்பத்திகொல்லாவ ஆகிய பகுதிகளில் கடந்த 24 மணித்தியாலயத்தில் இந்த வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 4 பாதசாரிகள் உட்பட 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனவே பண்டிகைக் காலங்களில் வீதிகளில் பயணிக்கும் போது அதிக கவனம் செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# வைத்தியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக நீடித்து அதிவிசேட வர்த்தமானி வெளியீடு



வைத்தியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 வரை நீடித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ. எச். எம். எச். அபயரத்னவின் கையொப்பத்துடன் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வைத்தியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக அதிகரிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியது.

2023 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் இதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

# 19 லட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 19 லட்சத்தைக் கடந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் இருந்து வந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, மேற்படி காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து 383,257 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

அத்துடன், 180,414 பேர் ரஷ்யாவில் இருந்தும், 166,999 பேர் பிரித்தானியாவில் இருந்தும் நாட்டுக்கு வந்துள்ளனர்.



# இந்தியப் பிரதமர் மோடிக்கு குவைத்தின் உயரிய விருது!





பிரதமர் நரேந்திர மோடிக்கு, குவைத்தில் உயரிய "தி ஆர்டர் ஆஃப் முபாரக் அல் கபீர்" விருது இன்று ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது.

இவ்விருதினை அந்நாட்டின் மன்னர் ஷேக் மெஷல் அல்-அஹ்மத் அல்-ஜாபர் அல்-சபாஹ், பிரதமருக்கு வழங்கி கௌரவித்தார்.

இந்த விருதினை பிரதமர் மோடி, இந்தியா - குவைத் இடையிலான நீண்ட கால நட்புக்கும், 140 கோடி இந்திய மக்களுக்கும் அர்ப்பணித்தார்.

கடந்த, 1947ஆம் ஆண்டு முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட உலகத் தலைவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

பிரதமர் மோடி, குவைத் மன்னருடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இந்த பேச்சுவார்த்தை குறித்து இந்திய வெளியுறவுச் செயலாளர் ரன்திர் ஜெய்ஸ்வால் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில் அவர், "ஒரு குறிப்பிடத்தகுந்த முன்னேற்றமாக, இந்தியா - குவைத் உறவுகள் ஒரு இராஜாங்க ரீதியிலான கூட்டாண்மைக்கு உயர்த்தப்பட்டது.

குவைத்தின் பயான் அரண்மனையில் அந்நாட்டு மன்னர் ஷேக் மெஷல் அல்-அஹ்மத் அல்-ஜாபர் அல்-சபாஹ்-ஐ பிரதமர் மோடி சந்தித்தார். இரு தரப்பு உறவுகளை புதிய உயரத்துக்கு கொண்டு செல்வது குறித்த வழிமுறைகளை ஆராய்வது குறித்து பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டது. அப்போது குவைத்தில் வாழும் இந்தியர்களின் நலன்களுக்காக பிரதமர் மோடி குவைத் மன்னருக்கு நன்றி தெரிவித்தார்."- என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, குவைத் அரண்மனையில் பிரதமர் மோடிக்கு மரியாதை நிமித்தமான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அந்நாட்டு மன்னரும் கலந்து கொண்டார்.

இதுகுறித்து வெளியுறவுத்துறை செயலாளர் வெளியிட்டுள்ள பதிவில்,

"வரலாற்றுச் சிறப்பு மிக்க வருகைக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பானியன் அரண்மனையில் பிரதமர் மோடிக்கு பாரம்பரிய வரவேற்பு மற்றும் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. ஷேக் மெஷல் அல்-அஹ்மத் அல்-ஜாபர் அல்-சபாஹ் பிரதமரை அன்புடன் வரவேற்றார்." என்று தெரிவித்திருந்தார்.





# இந்தியாவின் மின்னணுவியல் தொழிற்சாலையில் தீ விபத்து!

உத்தரப் பிரதேசின் நொய்டா செக்டார் 65 இல் அமைந்துள்ள மின்னணுவியல் நிறுவனத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தீ விபத்து ஏற்பட்டதாக இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் 15 தீயணைப்பு வாகனங்கள் மற்றும் 75 தீயணைப்பு வீரர்கள் தீயணைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், நிறுவனத்தின் அடித்தளத்தில் ஏற்பட்ட தீயை அணைக்க பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விபத்து தொடர்பான சேத விபரங்கள் இன்னும் மதிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர்நிறுத்த பேச்சுக்கள் 90 சதவீதம் நிறைவு



இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் காஸா போர்நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தை சுமார் 90 சதவீதம் நிறைவடைந்துள்ளது.

எனினும், இன்னும் சில முக்கிய விடயங்களில் இணக்கப்பாடு எட்டப்படாத நிலை உள்ளதாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள பாலஸ்தீனிய மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கட்டார் தலைநகர் தோஹாவில் இந்தப் பேச்சுவார்த்தையில், எகிப்தின் எல்லையில் தெற்கு காசாவில் உள்ள ஒரு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பகுதியான பிலடெல்பி நடைபாதையில் இஸ்ரேலிய இராணுவம் தொடர்ந்து இருப்பது தீர்க்கப்படாத விடயங்களில் ஒரு முக்கிய புள்ளியாகும் என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

அத்துடன், காஸாவுடனான இஸ்ரேலின் எல்லையின் நீளத்தில் பல கிலோ மீட்டர் அகலத்தில் ஒரு மண்டலத்தை உருவாக்குவதும், அங்கு இஸ்ரேல் தனது இராணுவ இருப்பை தக்க வைத்துக் கொள்ளும் முக்கிய பிரச்சினைகளுள் அடங்கும்.

இந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால், கீழ் காணும் மூன்று கட்ட போர் நிறுத்தம் சில நாட்களுக்குள் ஒப்புக் கொள்ளப்படலாம் என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

முதல் கட்டமாக விடுவிக்கப்படும் ஒவ்வொரு பெண் இஸ்ரேலிய இராணுவ வீரருக்கும் 20 பாலஸ்தீன கைதிகள் பரிமாறிக் கொள்ளப்படுவார்கள்.

கைதிகளின் பெயர்கள் விவாதிக்கப் படுகின்றன.

மேலும், இஸ்ரேலின் சிறைகளில் 25 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தண்டனை அனுபவித்து வரும் 400 பாலஸ்தீனியர்களின் பட்டியலிலிருந்து தேர்வு செய்யப்படுவார்கள்.

இருப்பினும், விடுதலையானது மூத்த பாலஸ்தீனத் தலைவர் மர்வான் பர்கௌதியை உள்ளடக்கும் என்று எதிர்பார்க்கப்படவில்லை.

காசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய பணயக்கைதிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுவார்கள்.

சிறைபிடிக்கப்பட்ட 96 பணயக்கைதிகளில் 62 பேர் இன்னும் உயிருடன் இருப்பதாக இஸ்ரேல் கருதுகிறது.

பேச்சுவார்த்தைகளின்படி, எகிப்து மற்றும் கட்டார் சம்பந்தப்பட்ட கண்காணிப்பு அமைப்பின் கீழ் காசா குடிமக்கள் வடக்கு காசாவிற்கு திரும்ப அனுமதிக்கும் ஒரு நடைமுறை விவாதிக்கப்படுகிறது.

மேலும் நாள் ஒன்றுக்கு 500 டிரக்குகளின் உதவியுடன் இவர்கள் காஸாவுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

அண்மைய வாரங்களில், இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்காக அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் தங்கள் மத்தியஸ்த முயற்சிகளை மீண்டும் தொடங்கியுள்ளன.

ஒக்டோபர் நடுப்பகுதியில் நடந்த பேச்சு வார்த்தைகள் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கத் தவறியது, ஹமாஸ் குறுகிய கால போர்நிறுத்த முன்மொழிவை நிராகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சமீபத்திய சுற்றிவளைப்புகளில் பலஸ்தீனியர்கள் அறுவர் கைது



இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் குறைந்தது ஆறு பலஸ்தீனியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன

நேற்று முன்தினம் மாலை முதல் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி முழுவதும் இஸ்ரேலியப் படைகள் சுற்றிவளைப்புகளை முன்னெடுத்து வருகின்றன

இந்த சுற்றிவளைப்பின் போதே ஆறு பலஸ்தீனியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

நப்லஸ், ரமல்லா, டுபாஸ், துல்கரேம் ஆகிய பகுதிகளில் தொடர்ந்தும் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 23.12.2024




இன்று மந்தமான நாளாக காணப்படும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் சில சௌகரியங்களை தியாகம் செய்ய வேண்டியிருக்கும் எனவே நனறாக சிந்தித்து செயல்படுவது நல்லது.

பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பணிகளை ஒழுங்குமுறைப்படுத்தி பணியாற்ற வேண்டும். உங்கள் சகபணியாளர்களுடன் கருத்து வேற்றுமை காணப்படும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. இன்றைய நாள் உங்கள் துணையுடன் கழிப்பதற்கு உகந்த நாள் அல்ல.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது. உங்கள் நிதிகளைக் கையாள்வதில் சற்று கடினம் காணப்படும்.

மனஎழுச்சி மற்றும் பாதுகாப்பற்ற உணர்வை தவிர்க்க வேண்டும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்றைய செயல்களினால் நற்பலன்கள் கிடைக்காது. ஆன்மீகச் செயல்களில் ஈடுபடுவதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளலாம். இது பதட்டத்தைக் குறைத்து வெற்றிக்கு வழிகாட்டும்.

பணிகளை எளிதாக இயற்ற இயலாது. பணிகளில் தாமதங்கள் காணப்படும்.

இன்று காதலில் சிறப்பாக எதையும் ஆற்ற இயலாது. உங்கள் துணையை சமாளிப்பது இன்று கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணம் ஒரு பிரச்சினையாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு இருக்காது.

தாயின் உடல்நிலை கவலையை அளிக்கும்.அதற்காக செலவுகள் செய்ய நேரும்.




உங்கள் இலக்குகளை நீங்கள் அடைந்து மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். இன்று அமைதியுடன் காணப்படுவீர்கள். சில பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் செய்யும் பணிகளுக்கு உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் நேர்மறையான மனநிலை காணப்படும். அதை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இன்று உங்களுக்கு மகிழ்ச்சியான நாள்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும் நிதிநிலையை மேம்படுத்துவதற்கான ஆற்றல் உங்களிடம் இருப்பதை நீங்கள் உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




இன்று நாள் முழுவதும் நேர்மறை சிந்தனைகளுடன் காணப்படுவீர்கள். உங்கள் சுய முயற்சி மூலம் செயல்களை விரைந்து முடிப்பீர்கள்.

நீங்கள் சரியான பணி அட்டவணையின் படி பணிகளை மேற்கொள்வதன் காரண–மாக உங்கள் பணியில் முன்னனியில் இருப்பீர்கள். இது உங்களுக்கு வெற்றியை அளிக்கும்.

உங்கள் தாய் தந்தையரிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் காதல் வாழ்க்கைக்கு அவர்களின் ஆலோசனை கேட்பது நல்லது.

இன்று அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




அதிர்ஷ்டத்தை நம்புவதைவிட உங்கள் முயற்சியில் நம்பிக்கை வையுங்கள். இன்று பயணங்கள் ஏற்படலாம்.ஆன்மீக அன்பரின் ஆலோசனை கிடைக்கப் பெற்று அதனால் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் வேலையில் சில விரும்பத்தகாத சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் அதன் காரணமாக உங்களுக்கு பணிமாற்றத்திற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்கள் துணையுடன் நல்லிணக்கத்தைப் பேண வேண்டும்.

பண வரவிற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது. கூடுதல் சுமை காணப்படும்.

இன்று மனஅழுத்தம் காரணமாக தலைவலி மற்றும் சளி உபாதைகள் காணப்படும்.




இன்று தடைகளை சந்திக்க நேரும். ஆனால் கவலைப்பட வேண்டியதில்லை. அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று உங்களுக்கு இறுக்கமான வேலை காணப்படும். என்றாலும் நீங்கள் செய்யும் வேலையில் வெற்றி காண்பீர்கள். இன்று நீங்கள் வேலையில் மும்மரமாக இருப்பீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. இன்று அமைதியான உறவைப் பேண பல தடங்கல்கள் ஏற்படலாம்.

இன்று சம்பாதியத்தை விட செலவு அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு சுமையாகிவிடும். பணத்தை கையாள்வதில் கவனம் தேவை.

உங்கள் ஆரோக்கியத்திற்கான பொது பரிசோதனை செய்து கொள்ளுங்கள். தலைவலி மற்றும் உயர் அழுத்த உபாதைகள் ஏற்படலாம்.




உங்கள் பணிகள் இன்று சுமுகமாக நடக்க நீங்கள் மிகுந்த அனுசரணையுடன் இருக்க வேண்டும். நீங்கள் நம்பிக்கை இழக்க நேரலாம். தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் சக பணியாளர்களுடன் ஜாக்கிரதையாகப் பழக வேண்டியது அவசியம்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் நல்லுறவு காண்பது கடினம். அமைதியுடனும் பொறுமையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. பணத்தைக் கையாள்வதில் சிரமம் காணப்படும்.

உங்கள் வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியத்திற்காக கூடுதல் செலவுகளை செய்ய நேரிடும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று உங்கள் தன்னம்பிக்கை மற்றும் நம்பிக்கைக்கு சாதகமான நாள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களுக்கு இடப்பட்ட பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்கள் ஆற்றலை நீங்கள் உணரும் வகையில் உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

இன்று உறவு சுமுகமாக இருக்காது. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படும் அமைதியாக இருக்க வேண்டும். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்க வேண்டும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சேமிக்கும் பழக்கத்தை நீங்கள் உருவாக்கலாம்.

காது மூக்கு தொண்டை பிரச்சினைகள் ஏற்படலாம். தலைவலி பாதிப்புகள் ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.12.2024




இன்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் பணிகளை முடிப்பதில் சற்று சிரமம் இருக்கும். மனஅழுத்தத்திலிருந்து விடுபட யோகா அல்லது தியானம் மேற்கொள்வது உங்களுக்கு பயனளிக்கும்.

இன்று உங்களுக்கு அதிகப் பணிகள் காணப்படும். அதை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் பிரியமானவர் உங்கள் மீது குற்றம் காண்பார்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இல்லை. பணத்தை கையாள்வதில் சிரமங்கள் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி மற்றும் தலைவலியால் பாதிக்கப்படலாம்.




இன்று சாதகமான நாள். தன்னம்பிக்கை நிறைந்து காணப்படுவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

பணியிடத்தில் நல்ல பெயர் எடுப்பீர்கள். உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுநிலை சுமாராக இருக்கும். உங்கள் துணையுடன் அனுசரித்துப் போவது மற்றும் திறமையான தொடர்பாடல் நல்லது.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். பணவரவிற்கான சாத்தியம் உள்ளது.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இல்லாமல் திடமான ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் சராசரி நாளாக இருக்கும். எதிர்மறை எண்ணங்களும் பாதுகாப்பற்ற உணர்வும் உண்டாகும். இருப்பதைக் கொண்டு மகிழ்ச்சி அடையுங்கள்.

பணியிடத்தில் அசௌகரியங்களை உணர்வீர்கள். சக பணியாளர்களுடன் பழகுவதில் சில பிரச்சினைகள் ஏற்படும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் காதலை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதில் சில சிக்கல்கள் காணப்படும்.

தேவையற்ற செலவினங்களுக்கான சாத்தியங்கள் காணப்படுகின்றது. பணத்தை கையாள்வதில் சிரமங்கள் காணப்படும்.

இன்று தலைவலிக்கான வாய்ப்புகள் உள்ளது.கூடுதல் பொறுப்புகள் காணப்படும்.




சொத்துக்களை இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. கவனமாக இருக்க வேண்டியது அவசியம். உங்கள் மனதை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள்பணியில்உங்களுக்குதிருப்தி ஏற்படாது. சக பணியாளர்களிடம் நல்லுறவு இருக்காது. இன்று அனுசரித்துச் செல்வது உங்களுக்கு நல்லது.

உங்கள் துணையிடம் பொறுமையைக் கையாள வேண்டும். நீங்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தாலும் உங்களின் பிரியமானவர் மகிழ்ச்சியுடன் காணப்படமாட்டார்.

நிதிநிலை சிறப்பாக இல்லை. கூடுதல் செலவினங்களை எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

ஆரோக்கியத்தில் அலட்சியமாக இருக்காதீர்கள்.




Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327
077 336 6443 | 071 777 2377
021 567 5566 | 021 222 9581
021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park